# The Baptist Tabernacle of Los Angeles

Mailing Address:
P. O. Box 15308
Los Angeles, CA 90015
Phone: (213) 744-9999
E-mail: rlhymersjr@sbcglobal.net
www.sermonsfortheworld.com
www.baptisttabernacle.com




Dr. Christopher L. Cagan
Pastor

Dr. R. L. Hymers, Jr.
Pastor Emeritus

டிசம்பர், 2020

அன்பான நண்பரே:

2020ம் ஆண்டைக் கடந்து வந்தது எவ்வளவு பெரிய குழப்பமாக இருந்தது! குடியரசு தலைவர் குற்றம் சாட்டப்பட்டார்! கொரோனா நம்மைத் தாக்கியது! காட்டுத்தீ நம்முடைய அநேக காட்டு வளங்களை சுட்டெரித்தது! மக்கள் கம்யூனிசத்தைப் பின்பற்றினார்கள், கொடுமையானவர்களாக மாறி நமது நகரங்களைச் சுட்டெரித்துக்கொண்டு இருக்கிறார்கள்! நானும்கூட நின்று பேசமுடியாமல் போனேன்! “மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு (விலகிப்போவார்கள்)” (I தீமோத்தேயு 4:1)! போப்பும்கூட ஓரின சேர்க்கைக்கு ஒப்புதல் அளித்தார்! இந்த முழு உலகமும் வெடிக்க தயாராக இருந்ததுபோல காணப்பட்டது; இயேசுவானவர் சொன்னார்,

> “சூரியனிலும் சந்திரனிலும் நடசத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்” (லூக்கா 21:25-28).

> “பெற்றாராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்” (லூக்கா 21:16).

***எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் மற்றும் பாடங்களை நாற்பத்தி* ஐந்து *மொழிகளில் WWW.SERMONSFORTHEWORLD.COM என்ற வலைதளத்தில் நீங்கள் படிக்க முடியும்.***

இந்த வசனங்களை வாசிக்கும் நாம் வேதாகம தீர்க்க தரிசனத்தின்படி இப்பொழுது நாம் கடைசி நாட்களில் ஜீவிக்கிறோம் என்று கண்டு கொள்ளாமல் இருப்பது எப்படி?

"ஆனால் இது கிறிஸ்துமஸ் காலமாக இருக்கிறது," என்று நீங்கள் சொல்லலாம்! 1941ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானியர்கள் பியர்ல் துறைமுகத்தின் மீது குண்டு போட்ட காரணத்தினால் ஹிட்லர் லண்டன் மீது குண்டு போட்டான் அதனால் இங்கிலாந்தில் இருந்த சர்ச்சில் இங்கே இருந்தார். சர்ச்சில் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பிராங்க்கிளின் டி. ரோஸ்வெல்ட்டோடு இருந்தார். ஜனாதிபதி தேசிய கிறிஸ்துமஸ் மரத்தில் விளக்கேற்றினபொழுது, சர்ச்சில் சொன்னார், "பிள்ளைகள் இரவு கேளிக்கையை மற்றும் விளையாட்டுகளை மகிழ்ந்து கொண்டாடட்டும்."

ஆனால் நீங்களும் நானும் இனிமேலும் "பிள்ளைகள்" அல்ல! நமது ஒரே நம்பிக்கை பெத்லகேமில் பிறந்த குழந்தைமீது உள்ளது, நமது மெய்யான நம்பிக்கை அது அல்ல – ஆனால் இயேசுவானவர் ராஜாதி ராஜாவாக மற்றும் கர்த்தாதி கர்த்தராக வர இருக்கும் இரண்டாம் வருகையை நம்பி இருப்பதுதான் மெய்யான நம்பிக்கை ஆகும்!

நீண்ட காலத்துக்கு முன்பாக, 1950ல், இந்த விசுவாச துரோகமான பொல்லாத காலத்துக்கு உதவியாக இருக்கும்படியாக தேவன் ஒரு வசனத்தை கொடுத்தார் அது ஒரு போதகரான எனக்கு ஆழமாக உதவி செய்தது.

> "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13).

பிப்ரவரி 2ல் காலை மற்றும் மாலை கூட்டங்களில் நாங்கள் சீன புது வருடத்தை கொண்டாடினோம்.

ஹோப் தெருவில் இருந்த பழைய கட்டிடத்தில் மார்ச் 1 ஞாயிற்றுக்கிழமை கடைசியாக இருந்தது. இந்த வருடத்தில் (2020) மீதியான கூட்டங்கள் கொரானா வைரஸ் காரணமாக, இரண்டு வீடுகளில் நாங்கள் கூடினோம். ஒவ்வொரு வாரமும் நான் ஒரு பாடத்தை வீடியோவில் பதிவு செய்தேன், அது அந்த இரண்டு வீடுகளிலும் ஓட்டிக்காட்டப்பட்டன. அந்த வீடியோ பாடத்துக்கு பிறகு நாங்கள் விருந்து உண்டோம்.

எனது 79ம் பிறந்த நாள் ஏப்ரல் 12, ஈஸ்டர் ஞாயிறு அன்று வந்தது. ஏப்ரல் 16 அன்று நாங்கள் திருமதி ஹைமர்ஸ் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடினோம். என்னால் சொல்லமுடியும், "அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள்" (நீதிமொழிகள் 31:29).

செப்டம்பர் 27ம் தேதி சபை எங்களுடைய 38ம் விவாக நிறைவுநாளை கொண்டாடியது. கடந்த ஆண்டு குடல் இறக்க வியாதியினால் நான் கஷ்டப்பட்டேன், அது என்னை நிற்க மற்றும் பிரசங்கிக்க முடியாதபடி செய்தது. புற்றுநோயுக்காக கொடுக்கப்பட்ட தீவிர கதிர்வீச்சு சிகிச்சை ஒரு நரம்பை அழித்து விட்டது அது இந்த வியாதியை கொண்டு வந்தது, இது குரோன்ஸ் வியாதி போன்றது.

இருந்தாலும், இதே வருஷத்திலே, தேவன் எங்கள் வேலையை ஆசீர்வதித்தார்! எங்களுடைய வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் மற்றும் பாடங்களில் இன்னும் மூன்று மொழிகளை www.sermonsfortheworld.com என்ற எங்கள் வலைதளத்தில் சேர்த்தோம். கோங்சோ சின், என்ற உள்ளூர் மையன்மார் (பர்மா) மொழியை எங்கள் 43வது மொழியாக சேர்த்தோம். இந்திய மொழிகளில் ஒன்றான, மளையாளத்தை, எங்கள் 44வது மொழியாக சேர்த்தோம். அதன்பிறகு இலங்கையின் மொழியான, சிங்களத்தை, எங்கள் 45வது மொழியாக சேர்த்தோம்.

*எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் மற்றும் பாடங்களை நாற்பத்தி* ***ஐந்து*** *மொழிகளில் WWW.SERMONSFORTHEWORLD.COM என்ற வலைதளத்தில் நீங்கள் படிக்க முடியும்.*

உலகம் முழுவதிலும் எங்கள் போதனைகளையும் பாடங்களையும் படித்த பிரசங்கிகளிடமிருந்து எப்படியாக அந்த போதனைகள் மற்றும் பாடங்கள் தங்களுக்கு உதவி செய்தன என்று ஒவ்வொரு வாரமும் அற்புதமான மின்னஞ்சல்களை நான் பெறுகிறேன்.

நமது பழைய கட்டிடத்தின் மீதான எஸ்குரோ என்ற சட்ட ஒப்பந்தம் ஜூலை 7ல் திறக்கப்பட்டது, எங்கள் மகன் ராபர்ட் செய்த வேலைக்காக அதிகமான நன்றி.

அக்டோபர் 13ல் யூஜின் கிரேஸ் வாழ்க்கையை ரிவர்சைடு நேஷனல் சிமெடிரியில் அடக்க கூட்டத்தில் முழுசபையும் கொண்டாடினார்கள். 91 வயதான திருவாளர் கிரேஸ் அவர்கள் இறந்து போவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக அவரை டாக்டர் கேஹன் அவர்கள் இயேசுவானவரை நம்பும்படி நடத்தினார்கள். திருவாளர் கிரேஸ் அவர்கள் நமது சபையின் சிறந்த இளம் உறுப்பினரான, டாம் ஜியாவின் தாயின் கணவராவார். ஒரு சில வாரங்களுக்கு பிறகு, டாக்டர் கேஹன் அவர்கள் திருவாளர் கிரேஸ் அவர்களின் மனைவி சோபியாவுக்கு, நற்செய்தியை கொடுத்தார்கள், அவள் இப்பொழுது நித்திய ஜீவனை பெற்றுக்கொண்டு இருக்கிறாள். சான் கேபிரியேலில் உள்ள நமது புதிய இடத்தில் முதலாவதாக ஞானஸ்நானம் பெறுவாள் என்று நம்பி இருக்கிறோம். திருவாளர் கிரேஸ் அவர்களின் அடக்க கூட்டத்தில் கலந்துகொள்ள திருமதி ஹைமர்ஸ் என்னை ரிவர்சைடுக்கு அழைத்து சென்றார். அதன்பிறகு ஆக்ஸ்நார்டுக் என்னை அழைத்து சென்றார், அங்கே கடற்கரை அருகில் ஓய்வாக ஒரு சில நாட்கள் செலவழித்தோம்.

நவம்பர் 22 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நாங்கள் ஒரு நன்றி செலுத்தும் பெருவிருந்து ஏற்பாட்டை அலகாம்பிராவில் உள்ள டாக்டர் கேஹன் அவர்களின் வீட்டிலே ஏற்பாடு செய்தோம்.

நான் இன்னும் வேலை செய்து கொண்டு இருக்கிறேன், டாக்டர் கேஹன் அவர்களுக்கு உதவியாக, போதனைகள் மற்றும் பாடங்களை எழுதி கொண்டு இருக்கிறேன். இன்னும் சில வாரங்களில், நான் என்னுடைய வாழ்க்கையின் 81ம் ஆண்டில் நுழைவேன். எனது விலையேறப்பெற்ற மனைவி இல்லியானா – மற்றும் நான் பெலனை பெற்றுக்கொள்ளுகிற இயேசுவானவர் இல்லையானால் என்னால் தெடர்ந்து வேலை செய்ய முடியாது.

> "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13).

இது இயேசுவானவரின் வாக்குத்தத்தம்! நான் இந்த கடிதத்தை முடிக்கிறேன், எனது பங்காளர் டாக்டர் கிருஷ்டோபர் எல். கேஹன் அவர்களின் சாட்சியை குறிப்பிட்டு:

> பல ஆண்டுகளுக்கு முன்பாக நான் சமாதானம் இல்லாதிருந்தேன். நான் எனக்காகவே வாழ்ந்தேன். நான் தேவனைப்பற்றியோ அல்லது நான் மரிக்கும்பொழுது எனக்கு என்ன சம்பவிக்கும் என்பதைபற்றியோ நான் நினைக்கவில்லை. நான் என்னையே நம்பி இருந்தேன். நான் தேவனுக்கு மறைந்து ஓடிக்கொண்டிருந்தேன். நான் கல்லூரியில் முதலிடத்தை பெற்றேன் ஏராளமான பணம் சம்பாதித்தேன், ஆனால் நான் தனிமையாக மற்றும் மகிழ்ச்சியற்று இருந்தேன்.
>
> பிறகு எனக்கு சிறந்தவர்களாக இருந்த சில கிறிஸ்தவர்களை நான் சந்தித்தேன். நான் சபைக்குபோக ஆரம்பித்தேன். ஆனால் எனது சொந்த வழியிலே வாழவிரும்பினேன். ஒருநாள் இரவில் பள்ளியிலே ஒரு கூட்டத்துக்கு சென்றேன். நான்

ஒருபோதும் கேள்விபடாத சிறந்த செய்தியை ஒரு இளம் மனிதன் எனக்கு சொன்னார் – அதாவது தேவன் என்னை நேசிக்கிறார் மற்றும் எனக்கு நித்திய ஜீவனை கொடுக்க விரும்புகிறார் என்று. அந்த ஜீவனை எப்படி பெற்றுக்கொள்ளுவது என்று அவர் எனக்கு சொன்னார். அந்த இரவிலே நான் இயேசுவானவரை நம்பினேன். அவர் எனது பாவங்களை மன்னித்தார் மற்றும் எனக்கு நித்திய ஜீவனை கொடுத்தார்.

இப்பொழுது நான் சமாதானம் பெற்றிருக்கிறேன். இப்பொழுது நான் நித்திய ஜீவனை பெற்றிருக்கிறேன். இயேசுவானவர் என்னை உள்ளாக குணமாக்கினார். அவர் எனக்கு நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியை கொடுத்தார். நான் இனிமேலும் தனிமையாக இல்லை. இயேசுவானவர் எனக்கு நித்திய ஜீவனை கொடுத்திருக்கிற காரணத்தால், இன்று இரவு நான் மரித்தாலும், பரலோகத்தில் தேவனோடு இருக்க செல்லுவேன் என்று நான் அறிந்திருக்கிறேன்!

நான் இயேசுவானவருக்காக வேலை செய்துகொண்டிருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்! அவருடைய வல்லமை மற்றும் கிருபை, மற்றும் டாக்டர் கேஹன், இல்லியானா, மற்றும் எங்கள் மகன் ஜான் வெஸ்லி, அவன் அடுத்த வசந்த காலத்தில் மருத்துவமுறைக் குருதிவடிப்பு சம்மந்தமான படிப்பு கல்லூரியில் படிக்க இருக்கிறான் இவர்களின் உதவி இல்லாமல் என்னால் இதை செய்ய முடியாது.

இயேசுவானவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! இயேசுவானவரின் மூலமாக விடுதலை என்ற கென்டின் புத்தகத்தை நானும் கென்ட் பில்போட்டும் தொகுக்கிறோம், எங்களுக்காக தயவுசெய்து ஜெபியுங்கள்! சான் கேபிரியேலில் புதிய சீன பாப்டிஸ்ட் சபையை துவங்க போகிறோம் எங்களுக்காக தயவுசெய்து ஜெபியுங்கள்.



டாக்டர் ஹைமர்ஸ் அவர்களுடைய மனைவி இல்லியானா, அவருடைய மகன் ராபர்ட், ராபர்ட்டின் மனைவி ஜின், மற்றும் ராபர்டின் இரண்டு பெண் குழந்தைகள், ஹன்னா மற்றும் சாரா. அவர்கள் விரைவில் மற்றொருபிள்ளையை பெறுவார்கள் என்று நான் ஜெபித்துக்கொண்டு இருக்கிறேன்.

கிறிஸ்து என்றென்றும் துதிக்கப்படுவாராக!



ரெவரண்ட் ஆர். எல். ஹைமர்ஸ், ஜூனியர்,
D.Min., D.Rel., Th.D., Litt.D.
பிலிப்பியர் 4:13

“விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்” (நீதிமொழிகள் 21:16).

*எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் மற்றும் பாடங்களை நாற்பத்தி **ஐந்து** மொழிகளில் WWW.SERMONSFORTHEWORLD.COM என்ற வலைதளத்தில் நீங்கள் படிக்க முடியும்.*